**தினமணி**

## இன்றைய வேளாண் செய்திகள்

### தளியில் 120 மி.மீ. மழை: இன்று மழை பெய்யும்

வட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையில், மாநிலத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் 120 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. லட்சத்தீவு - குமரிக் கடல் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளதால், வட தமிழகத்தில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய உள்மாவட்டங்களின் பல இடங்களில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்யும். மேலும் கடலோர மாவட்டங்களின் சில இடங்களிலும் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் 120 மி.மீ. மழை பதிவானது. திருப்பூரில் 90 மி.மீ., சத்தியமங்கலத்தில் 70 மி.மீ. மழை பதிவானது. குன்னூர், மானாமதுரை (50 மி.மீ.), சோழவந்தான், கோபி, தூத்துக்குடி (40 மி.மீ.), கொடைக்கானல், சேரன்மாதேவி, மேலூர், ஒசூர், வாடிப்பட்டி, பாளையங்கோட்டை, மதுரை, ஒகேனக்கல் (30 மி.மீ.), கோத்தகிரி, நிலக்கோட்டை, தாராபுரம், திருச்செந்தூர், மேட்டுப் பாளையம், அவிநாசி, பெரியகுளம் (20 மி.மீ.), கேட்டி, மணப்பாறை, காரைக்குடி, ஏற்காடு, வாணியம்பாடி, கோவை தெற்கு, பெருந்துறை, ஊட்டி, சிவகங்கை, ஒரத்தநாடு, கமுதி, கடலூர், பரமக்குடி, மேட்டூர், வால்பாறை,

விருத்தாசலம், பாம்பன், காரைக்கால் (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

## கடலோர உவர் நிலங்களில் கடல்பாசி உற்பத்தி: வேளாண். பல்கலை துணைவேந்தர் யோசனை

தமிழகத்தில் கடலோர உவர், உப்புத்தன்மையுள்ள நிலங்களில் கடல்பாசி வகைகளை உற்பத்தி செய்யலாம் எனவும், அதற்கு சிறந்த சந்தை வாய்ப்புகள் உள்ளது என்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக துணைவேந்தர் கே.ராமசாமி தெரிவித்தார். மதுரை வேளாண்மைக் கல்லூரியில் நிலைத்த வேளாண் உற்பத்தியில் கடல்பாசிகள் பங்கு குறித்த இருநாள் தேசியக் கருத்தரங்குக்கு தலைமைவகித்து பேசுகையில், கடல்பாசி வகைகளில் 40 சதவிகிதம் நார்ச்சத்தும், 12 சதவிகிதம் புரோட்டினும் உள்ளது. இதை மேம்படுத்துவதன் மூலம் இந்த சத்துக்களை உணவாகவும் இதில் வெளிவரும் கழிவுகளை பயோ பெட்ரோலாக, மாற்று எரிபொருளாக உற்பத்திசெய்ய முடியும். நமது ஆராய்ச்சி நிலையங்களின் புதிய கண்டுபிடிப்புகள் சோதனைக்குழாய் அளவிலேயே கடந்த காலங்களில் இருந்துவிட்டன. புதியகண்டுபிடிப்பை உற்பத்தி அளவில் கொண்டுவரத் தேவையான அடிப்படை விதை உற்பத்தியாகும். தற்போது புதிய கண்டுபிடிப்பை வெளியிடும்முன் தேவையான விதையையும் நாம் தயாரித்துக் கொடுக்கிறோம். பாசிவகைகளை உவர், உப்புத் தன்மையுள்ள கடலோரப்பகுதி நிலங்களில் உற்பத்தி செய்ய அதிக வாய்ப்புள்ளது. அந்நிலங்களில் பாசிவகைகளை பயிர்செய்வதன் மூலம் நிலத்தை நல்ல விளைநிலமாக மாற்றவும் வழியேற்படும். தற்போதைய விளைநிலங்கள் வீட்டடிமனைகள், தொழிலகம் மற்றும் நகர்புற விரிவாக்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. விவசாய நிலங்களில் 63 சதவிகிதம் நீரின்றி தரிசாகக் கிடக்கிறது. குறைந்த நிலம், நீரில் நாம் வேளாண் உற்பத்தியை இரட்டிப்பாக்க வேண்டும். அதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. தமிழகத்தில் ஆராய்ச்சியுடன் உற்பத்திக்கான

மையங்கள் மதுரை, திருச்சி, சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு, கோவை ஆகிய இடங்களில் முதல்கட்டமாகத் தொடங்கப்படவுள்ளது என்றார். இக்கருத்தரங்கில் மதுரை வேளாண். கல்லூரி முதல்வர் சி.சின்னுசாமி சிறப்புரை யாற்றினார். மனையியல் கல்லூரி முதல்வர் கோ.புஷ்பா, சென்னை கிறிஸ்டியன் கல்லூரி உயிரியல்துறை தலைவர் எம்.பாலுசாமி ஆகியோர் கடல்பாசியின் பயன்கள் குறித்து விளக்கம் அளித்தனர். மதுரை வேளாண். கல்லூரி பேராசிரியர் கே.பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**<u>தேனி மாவட்டத்தில் மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**

தேனி மாவட்டம் மற்றும் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பெரியாறு அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 129.9 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1369 கன அடி. அணையிலிருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 1646 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. வைகை அணை நீர்மட்டம் 40.94 அடி. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1573 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 960 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 44 அடி. அணைக்கு நீர்வரத்து 208 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 8 கன அடி தண்ணீர் வெளியேறுகிறது. சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 63.96 அடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 120 கன அடி. அணையிலிருந்து வினாடிக்கு 3 கன அடி தண்ணீரும் வெளியேறுகிறது.

**<u>விவசாயிகளுக்கு நெல் சாகுபடிநவீன தொழில் நுட்ப ஆலோசனை</u>**

முதுகுளத்தூர், கடலாடி, கமுதி, ஆகிய தாலுகாக்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரிலையன்ஸ் அறக்கட்டளை ஏற்பாட்டில் நவீன தொழில் நுட்ப ஆலோசனைகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவிக்கப்பட்டன. ராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முதுகுளத்தூர், கடலாடி ஆகிய

தாலுகாக்களைச் சேர்ந்த விவசாயிகள் ஏராளமானோர், நெல் சாகுபடி விவசாயத்தில் ஈடுபட்டுள்ளன. நெல் விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து, அதிக மகசூல், வருமான லாபம் பெறுவதற்கு விவசாயிகளுக்கு நேரடி ஆலோசனைகள் வழங்கப்பட்டன. உயிர் உரம் நேர்த்தி செய்முறை, முளைப்புத் திறன் பரிசோதனை, நில மேலாண்மை, உயிர் உரம் உபயோகம், விதைப்பு தொழில் நுட்பம், களை நீக்கும் மேலாண்மை, தொழு உரம் தயாரிப்பு, பூச்சி ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு மேலாண்மை ஆகிய நவீன விவசாய தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயத் தொழில் வல்லுநர் செந்தில் குமார் தகுந்த ஆலோசனைகளைக் கூறினார்.

## ஒகேனக்கல் அருவிகளில் வெள்ளம்

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியாற்றில் திங்கள்கிழமை நீர்வரத்து அதிகரித்ததால், அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக மழை பெய்து வருகிறது. இதையடுத்து, ஒகேனக்கல் காவிரியில் ஞாயிற்றுக் கிழமை நொடிக்கு 28 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, திங்கள்கிழமை 30 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. இதனால், பிரதான அருவிக்குச் செல்லும் நடை பாதையை மூழ்கடித்து தண்ணீர் செல்கிறது. ஐந்தருவிப் பகுதியிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஒகேனக்கல் அருவிப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை 25.40 மி.மீட்டர் பதிவானது. மேட்டூர் அணை: மேட்டூர் அணைக்கு கடந்த சில நாள்களாக நீர்வரத்து அதிகரித்ததால், அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 91.74 அடியாக இருந்தது. அணைக்கு ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 34,661 கன அடியாக இருந்த நீர்வரத்து, திங்கள்கிழமை 27,873 கன அடியாகக் குறைந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனம், கிழக்கு, மேற்குக் கால்வாய்

பாசனத்துக்காக நொடிக்கு 18,600 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 54.66 டி.எம்.சி.யாக உள்ளது. ஒருங்கிணைந்த மீன் பண்ணையம் திட்டத்தில் இலவச மீன் குஞ்சுகள்பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தின் ஒருங்கிணைந்த மீன் பண்ணையம் திட்டத்தின் கீழ் இலவச மீன் குஞ்சுகள் வழங்கப்பட உள்ளது என்றார் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி. இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2014- 15-ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த மீன் பண்ணை அமைத்தல் என்ற முதல் நிலை செயல் விளக்க திட்டத்தின் கீழ், ரோவர் வேளாண் மையம் சார்பில், பெரம்பலூர் மாவட்டத்தில் மீன் பண்ணை அமைக்கும் அளவில் மீன் குட்டை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவசமாக மீன் குஞ்சுகள் வழங்கப்பட உள்ளது. நம் நாட்டில் பல்வேறு வகையான கெண்டை மீன்கள் உள்ளன. அவற்றில், வளர்ப்பு மீனுக்கு தேவையான முக்கிய குணநலன்களின் அடிப்படையில், வேக வளர்ச்சிப் பெருங்கெண்டைகள் குளங்களில் வளர்ப்பதற்கென தேர்வு செய்யப்பட்டுள்ளன. அத்தகைய கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் வேகமாக வளரக்கூடிய வெளிநாட்டுக் கெண்டைகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய கெண்டைகளை, தனித்தனி இனங்களாக வளர்த்தால் பயனில்லை. குறிப்பிட்ட இன விகிதாச்சாரப்படி ஏற்ற அடர்த்தியில், அனைத்து வகை கெண்டை மீன்களையும் சேர்த்து வளர்த்தால் நல்ல உற்பத்தியைப் பெறலாம். ஒருங்கிணைப்பதற்கு ஏற்ற 6 வகையான கெண்டை மீன் வகைகளை ஒருங்கிணைந்த மீன் பண்ணையம் என்ற முதல் நிலை செயல் விளக்கத் திட்டத்தின் கீழ், ரோவர் வேளாண்மை அறிவியல் மையம் இலவசமாக வழங்க உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 87541 14165 என்ற செல்போன் எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

இன்றைய வேளாண் செய்திகள்

<u>நாட்டின் கரீப் சாகுபடி பரப்பு10 கோடி ஹெக்டேரை தாண்டியது</u>



புதுடில்லி: கரீப் பயிர் விதைப்பு பணிகள், சூடுபிடித்ததையடுத்து, மொத்த சாகுபடி பரப்பு, 10 கோடி ஹெக்டேரை தாண்டியுள்ளது என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.இருப்பினும், கடந்தாண்டு கரீப் பருவத்துடன் ஒப்பிடும் போது, நடப்பு பருவத்தில் சாகுபடி பரப்பு குறைந்தே காணப்படுகிறது.இதன்படி, கடந்தாண்டு கரீப் பருவத்தில், 10.44 கோடி ஹெக்டேராக இருந்த சாகுபடி பரப்பு, நடப்பு கரீப் பருவத்தில், 10.19 கோடி ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.மத்திய வேளாண் அமைச்சக புள்ளிவிவரத்தின்படி, நெல் சாகுபடி பரப்பு, கணக்கீட்டு காலத்தில், 3.74 கோடி ஹெக்டேரிலிருந்து, 3.75 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதே போன்று, பருத்தி பயிரிடும் பரப்பும், 1.14 கோடி ஹெக்டேரிலிருந்து, 1.26 கோடி ஹெக்டேராக வளர்ச்சி கண்டுள்ளது.அதேசமயம், செப்டம்பர் 26ம் தேதி நிலவரப்படி, இதர கரீப் பருவ பயிர்கள் சாகுபடி பரப்பு, கடந்தாண்டை காட்டிலும் குறைந்துள்ளது.முக்கிய உணவு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் சாகுபடி பரப்பு முறையே, 1.82 கோடி ஹெக்டேர் மற்றும் 1.01 கோடி ஹெக்டேராக உள்ளன.இவை தவிர, எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் சணல் – மெஸ்தா சாகுபடி பரப்பு முறையே, 1.77 கோடி

ஹெக்டேர், 48.70 லட்சம் ஹெக்டேர் மற்றும் 81.50 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் உள்ளன.மத்திய அரசு, நடப்பாண்டு கரீப் பருவத்தில், 9.40 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**சீரான விதை நடவிற்காக உருண்டை வடிவ விதைகள் அறிமுகம்**

மதுரை: ''சீரான விதை நடவிற்காக நீலப்பச்சைப் பாசிகள் மற்றும் நுண்ணுயிரிகளால் ஊட்டம் பெற்ற உருண்டை வடிவ விதைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன,'' என, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி தெரிவித்தார். இதுகுறித்து, மதுரை விவசாயக் கல்லூரியில் அவர் மேலும் கூறியதாவது:நீலப்பச்சை பாசிகள், 25 ஆண்டுகளாக விவசாயத்திற்கு பயன்பட்டு வந்தது. கடந்த 10 ஆண்டுகளாக அவற்றின் பயன்பாடு குறைந்துள்ளது.விதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருப்பதால், இயந்திர நடவு என்பது சிலநேரங்களில் சாத்தியமில்லாதது. அதே நேரத்தில் தரமான விதைகள் என சான்றளிக்கப்பட்டாலும், அவை 80 சதவீத அளவே முளைப்புத் திறன் பெற்றுள்ளன. விதைகளின் முளைப்புத்திறனை, 100 சதவீதமாக்கவும், சீரான விதை நடவிற்காகவும், பல்கலை விதை மையம் சார்பில், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீலப்பச்சைப் பாசிகளுடன் சூடோமோனஸ், ட்ரைகோடெர்மா, அசோஸ்பைரில்லம் ஆகிய நுண்ணுயிரிகள், தேவையான நோய் எதிர்ப்பு பூச்சிக்கொல்லி கலந்து விதைகளின் மீது தடவி உருண்டை வடிவ விதைகளை உருவாக்குகிறோம். இவற்றை இயந்திரத்தில் செலுத்தும் போது, நடவு ஒரே சீராக இருக்கும். விதைகளின் பயன்பாடு, 50 சதவீத அளவு குறைந்து விடும். வளர்ச்சி சீராக இருப்பதால், அறுவடையும் இயந்திரத்தின் மூலம் ஒரே நேரத்தில் சாத்தியமாகும். தற்போது எள், மிளகாய், தக்காளி, கத்தரி காய்கறிப் பயிர்களில் உருண்டை விதைகளை உருவாக்கியுள்ளோம். விரைவில் பருத்தி விதை தயாராக உள்ளது.

மேலும், சிறுதானிய விதைகளை இம்முறையில் உருவாக்க ஆராய்ச்சிகள் நடக்கின்றன. சிறுதானிய விதை உற்பத்தி சாத்தியமானால் வறட்சியைத் தாங்கி, நோய் எதிர்ப்பு சக்தியுடன், இவை வளரும். இத்தொழில்நுட்பம் மாவட்ட வேளாண் அறிவியல் மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக கற்றுத்தரப்படும்.இவ்வாறு, அவர் கூறினார்.

**<u>நல்ல பயிரை தேர்வு செய்ய வேளாண் அதிகாரி வேண்டுகோள்</u>**

தர்மபுரி: "ஒவ்வொரு பயிரின் முளைப்புத்திறன் சதவீதத்தை அறிந்து, நல்ல தரமான விதைகளை வாங்க, விதை பரிசோதனை நிலையத்தில், குறைந்த செலவில், விதை பரிசோதனை செய்து கொள்ளலாம்,' என, வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். தர்மபுரி விதை பரிசோதனை நிலைய அலுவலர் கமலா கூறியதாவது:

ஒவ்வொரு பயிருக்கும், ஒரு குறிப்பிட்ட அளவில் முளைப்புத்திறன் வரையறுக்கப்பட்டு உள்ளது. இதில், சுரை போன்ற கொடி வகைகளும், கேரட், பீட்ரூட், 60 சதவீதமும், கொத்தவரை, முருங்கை, பருத்தி, 65 சதவீதமும், கத்தரி, தக்காளி, கீரைகள், முட்டைகோஸ், நூல்கோல், வெங்காயம், முள்ளங்கி, கொத்தவரை, பசுந்தாள் உரம், நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு, சோயாமொச்சை ஆகிய பயிர்கள், 70 சதவீதமும், கம்பு, சோளம், ராகி, பயிறு வகைகள், 75 சதவீதமும், நெல், கொள்ளு, எள் பயிர்கள், 80 சதவீதமும், கொண்டைக்கடலை பயிர்கள், 85 சதவீமும், மக்காச்சோள பயிர்கள், 90 சதவீதமும் முளைப்புத்திறனை கொண்டது. எனவே, விதைப்புக்கு முன் தாங்களே முளைப்பு பரிசோதனை செய்து, போதிய அளவு முளைப்புத்திறன் இருந்தால் மட்டுமே விவசாயிகள் விதைப்பு மேற்கொள்ள வேண்டும். தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் இயங்கி வரும், தர்மபுரி விதை பரிசோதனை நிலையத்தில், தங்களின் விதை மாதிரி கொண்டு வந்து பரிசோதித்து, தரமானதாகவும், வீரியமுள்ளதாகவும், நாற்றுக்கள் தரமுள்ளதா என பரிசோதித்து, அதன் அடிப்படையில் விவசாயிகள்

விதைப்பு மேற்கொண்டால் நல்ல மகசூல் அடையலாம். ஒரு விதை மாதிரி பரிசோதனைக்கு, 30 ரூபாய் வசூலிக்கப்படும்.

## நம்பியூர் வேளாண்மை துறை சார்பில் நேரடி நெல் விதைப்பு செயல்விளக்கம்

கோபி: வேளாண்மை துறை சார்பில், நம்பியூர் கூடக்கரை கிராமத்தில், நேரடி நெல் விதைப்பு செயல்விளக்கம் நேற்று நடந்தது. நாற்றாங்கால் அமைத்து, கைவிதைப்பாக நெல் விதைகளை ஊன்றி, 21 நாட்கள் கழித்து, விதை நெற்பயிரை பிடுங்கி, ஏர் உழுத நிலத்தில் பாரம்பரியமாக விவசாயிகள் நெல் சாகுபடி செய்து வந்தனர். இது நாளடைவில், ஆட்கள் பற்றாக்குறை, கூலி பிரச்னை, குறித்த தருணத்தில் சாகுபடி மேற்கொள்ள முடியாமை உள்ளிட்ட பிரச்னைகளால் விவசாயிகள் அவதிப்பட்டனர். பாரம்பரிய முறைக்கு மாற்றாக, நவீன தொழில் நுட்பத்துடன், டிரேக்களில் நெல் விதைப்பு செய்து, மெஷின் மூலமாக நாற்று நடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதையடுத்து புதிய கண்டு பிடிப்பாக, கோபி தாலுகாவுக்கு உட்பட்ட, நம்பியூர் அருகே கூடக்கரையில், நேரடி நெல் விதைப்பு குறித்த செயல்விளக்கம், வேளாண் துறை சார்பில் நடந்தது. அப்போது நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தலைமையில், பரமசாமி என்பவரது வயலில் செயல்விளக்கம் நடந்தது. அப்போது உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறுகையில், ""நேரடி நெல் விதைப்பில் விதையிடும், உருளை கருவியை பயன்படுத்துவதால், பயிர் எண்ணிக்கை பராமரிப்படுகிறது. கோனோ வீடர்களை எடுக்கும் உருளையை இயக்குவதற்கு, வயலில் பயிர் பராமரிப்பாக, 15 கிலோ விதையளவு போதுமானது. நாற்றாங்கால் தயாரிக்கும் பணியும், அதற்குரிய பராமரிப்பு செலவும் மீதமாகும். நாற்று நடவு செய்யும் கூலியும் குறைவாகும். இதனால், ஏக்கருக்கு, 5,000 ரூபாய் உற்பத்தி செலவு குறைகிறது," என்றார். கூடக்கரை, ஆண்டிபாளையம், எலத்தூர், மோடூர்பாளையம், தொட்டிபாளையம் உள்ளிட்ட

கிராமங்களை சேர்ந்த, முன்னோடி விவசாயிகள், உழவர் மன்ற உறுப்பினர்கள், பயிர் ஆர்வர் குழுவினர் கலந்து கொண்டனர். வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமைத்திட்டத்தின், நம்பியூர் வட்டார மேலாளர் மோகனசுந்தரம் வரவேற்றார். குருமந்தூர் துணை வேளாண் அலுவலர் இளங்கோவன் நன்றி கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் மணிகண்டன் மற்றும் அருண்குமார் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்தனர்.

**<u>தொடரும் மழையால் மகிழ்ச்சி கொடிவேரியில் அதிகபட்சம் பதிவு</u>**

ரோடு: கொடிவேரியில் அதிகபட்சமாக மழை பெய்துள்ளது. தொடரும் மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில், கடந்த சில தினங்களாகவே, பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக மாலை அல்லது இரவில் துவங்கி மழை பெய்கிறது. நேற்று முன்தினம் கொடிவேரியில் அதிகபட்ச மழையளவு பதிவாகி உள்ளது. மாவட்ட அளவில், சத்தியமங்கலம்,65.4 மி.மீட்டர், பவானிசாகர்,10, ஒரத்துப்பாளையம் அணை,62, கொடிவேரி,76, கோபி,42, எலந்தகுட்டைமேடு,2, பெருந்துறை,11, புங்கம்பாடி,4.6., ஈரோடு,5, சென்னிமலை,8, சிவகிரி,2, முத்தூர்,28, மங்களப்பட்டி,30, காங்கேயம்,6.8 மி.மீட்டர் என மழையளவு பதிவாகி உள்ளது. சில தினங்களாக பெய்து வரும் மழையால், மாலை, நான்கு மணிக்கு பின் இதமான சூழல் நிலவுகிறது. தொடரும் மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு உள்ளது. மேலும், இரவில் குளிர்ந்த சூழல் நிலவுவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>நிலக்கடலை சாகுபடி விவசாயிகள் ஆர்வம்</u>**

பட்டிவீரன்பட்டி: தொடர் மழையினால் சித்தரேவு பகுதி விவசாயிகள் நிலக்கடலை சாகுபடியில் கவனம் செலுத்த துவங்கியுள்ளனர். தாண்டிக்குடி மலை அடிவாரத்தில் சித்தரேவு உள்ளது. மலை அடிவாரத்தில் இருந்தாலும் மூன்று ஆண்டுகளாக மழை இல்லாததால்

விவசாயம் செய்ய முடியவில்லை. கடந்த சில நாட்களாக சித்தரேவு, அய்யம்பாளையம் பகுதிகளில் மழை பெய்தது. இம்மழையை பயன்படுத்தி மலை அடிவாரத்தில் உள்ள விவசாயிகள் 100 ஏக்கர் பரப்பளவில் மானாவாரியாக நிலக்கடலை சாகுபடி செய்துள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளாக முள் செடிகள் முளைத்து காய்ந்திருந்த நிலம், தற்போது மானாவாரி கடலையால் பச்சை பசேல் என உள்ளது. மேலும் கடலைச் செடி காய் பிடிக்கும் பருவத்திற்கு வந்ததால் மஞ்சள் பூ பூத்து ரம்மியமாக காட்சியளிக்கிறது. கடலையில் ஊடுபயிராக துவரை பயிரிட்டு உள்ளனர். இது குறித்து சித்தரேவு விவசாயி சோனாச்சலம் கூறுகையில்,""பல மாதங்களுக்குப் பிறகு விவசாயம் செய்துள்ளேன். அவ்வப்போது மழை பெய்தால் கூட கடலை சாகுபடி அமோகமாக இருக்கும். தொடர்ந்து மழை பெய்து விளைநிலங்களை காப்பாற்ற வேண்டும்" என்றார்.

## நிலத்தடி நீரை உயர்த்த பள்ளி மாணவர்கள் ஆய்வு

மன்னார்குடி: சுற்றுச்சூழல் பாதுகாப்பு நீர் ஆதாரத்தை மேம்படுத்துதல், கழிவு நீர் மேலான்மை என்ற தலைப்பில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தேசிய மேல்நிலைப்பள்ளியில் ஆய்வு நடந்தது. மாணவர்கள் காயத்திரி, கலாவதி, பூவரசி.சிவராமன் உள்ளிட்டவர்கள் பல்வேறு சோதனைகளை மேற்கொண்டனர். நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், மின்சார வாரிய நகரில் மாதிரி அமைப்பு செய்து காட்டினார். பள்ளி தலைமை ஆசிரியர் ராதா கிருசஷ்ணன் உட்பட ஆசிரியர்கள் மாணவர்களில் ஆய்வை பாராட்டினர்.

## பூச்சி மருந்து பாதுகாப்பு கருவி உபயோக பயிற்சி

சின்னமனூர் : நட்சத்திர விவசாயிகளுக்கு பூச்சி மருந்து பாதுகாப்பு கருவிகள் உபயோகம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. கோரமண்டல் இன்டர் நேஷனல் லிமிடெட் மற்றும் கம்பம் வேளாண்மை துறையினரும் இணைந்து நட்சத்திர விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகளை பாதுகாப்பான முறையில் பயிர்களுக்கு எப்படி தெளிப்பது என்பது

குறித்தும், தெளித்தபின் ஏற்படும் விளைவுகள் பற்றியும், பூச்சி மருந்து பாதுகாப்பில் பாதுகாப்பு கருவிகள் உபயோகம் பற்றிய பயிற்சி மற்றும் கருத்தரங்கு சுருளிபட்டியில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் அசோகன், ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குனர் கோவிந்தராஜன், தோட்டக்கலை உதவிபேராசிரியர் சுப்பையா, திராட்சை ஆராய்ச்சிநிலையம் மற்றும் கோரமண்டல் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் சாம்பசிவராவ், சிவசங்கரன், சம்பத்குமார் ஆகியோர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை சுந்தரஈஸ்வரன், சதிஷ்குமார் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் செய்திருந்தனர்.இதில் நட்சத்திர விவசாயிகள் 150 பேர் பங்கேற்றனர்.

**<u>ஒரே நாளில் 14 அடி உயர்ந்தசோத்துப்பாறை அணை</u>**

பெரியகுளம் : கொடைக்கானல் மலைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதால் சோத்துப்பாறை அணை நீர்மட்டம் ஒரே நாளில் 14 அடி உயர்ந்துள்ளது. பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ., தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. அணையின் மொத்த உயரம் 126 அடி. எதிர்பார்த்த பருவமழை பெய்யாததால் நீர் மட்டம் கடந்த செப்.,22ல் 25 அடியாக குறைந்தது. இந்நிலையில் சாரல் மழையால் செப்.,26ல் 36 அடியாக இருந்தது. தொடர்ந்து கொடைக்கானல் மலைப்பகுதியில் மழை பெய்து வருவதால் செப்.,27ல் 39 அடியாகவும், செப்.,28ல் 49.3 அடியாகவும், நேற்று ஒரே நாளில் 14 அடி உயர்ந்து 63.96 அடியானது. மழையளவு 5 மி.மீ., அணைக்கு வினாடிக்கு 120 கனஅடி நீர் வரத்து உள்ளது. பாசனவிவசாயிகள் எதிர்பார்ப்பு: இதே நிலை தொடர்ந்து நீடித்தால், விரைவில் அணையின் நீர் மட்டம் 126 அடியை தொடும், என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள 1,892 ஏக்கரில் உள்ள விவசாய நிலங்களும்.

நூற்றுக்கணக்கான ஏக்கர் மறைமுகமான விவசாய நிலங்களும் பயன்பெறும். புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1040 ஏக்கரில் விவசாய நிலங்களும் பயன்றுபெறும். தென்கரை புரவு, மேலப்புரவு, கீழப்புரவு, நடுப்புரவு விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## பருவமழை துவங்கியதால் உழவுப்பணிகள் மும்முரம்! மழை ஏம ற்றாது என்ற நம்பிக்கையில் விவசாயிகள்

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழை பெய்யத் துவங்கியதால் உழவுப்பணிகள் தீவிரம் அடைந்துள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளைப்போல் இந்த ஆண்டு மழை ஏமாற்றாது என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளதால் முனைப்புடன் விவசாய பணிகளில் ஈடுபடத்துவங்கியுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 196 எக்டேரில் நெல், 16,292 எக்டேரில் மிளகாய், 2 ஆயிரத்து 717 எக்டேரில் சோளம், ஆயிரத்து 748 எக்டேரில் மல்லி, 2 ஆயிரத்து 733 எக்டேரில் பருத்தி, 145 எக்டேரில் வாழை, ஆயிரத்து 448 எக்டேரில் கேழ்வரகு, 889 எக்டேரில் கம்பு, 231 எக்டேரில் கரும்பு, 6ஆயிரத்து 112 எக்டேரில் நிலக்கடலை, ஆயிரத்து 636 எக்டேரில் எள், 166 எக்டேரில் சூரியகாந்தி, 4 ஆயிரத்து 79 எக்டேரில் சிறுதானியங்கள் பயிரிடப்படுகின்றன. மாவட்டத்தில் ஆண்டின் சராசரி மழையளவு 866.60 மி.மீ.. 2009 ல் 681.5 மி.மீ., 2010 ல் 105.9 மி.மீ., 2011ல் 569 மி.மீ., 2012 ல் 570 மி.மீ., 2013 ல் 452 மி.மீ., என சராசரிக்கு குறைவாகவே மழை பதிவாகி வந்துள்ளது. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவிவந்தது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். நடப்பாண்டு பருவமழையை விவசாயிகள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் அதிகாலையிலிருந்தே பரவலாக மழை பெய்யத்துவங்கியது. நேற்று பகலிலும் சிறிது நேரம் லேசான சாரல் மழை இருந்தது. இதையடுத்து

விவசாயிகள் உழவுப்பணியை துவங்கியுள்ளனர். விவசாயி ராமு கூறுகையில்,""கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயம் செய்ய முடியாததால் விவசாயிகள் மட்டுமல்லாது, கூலிதொழிலாளர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு இந்த நிலை இருக்காது என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உழவுப்பணிகளை துவக்கியுள்ளனர். இந்த ஆண்டு போதிய மழை பெய்து விவசாயிகளை மகிழ்விக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது," என்றார்.

## மாவட்டத்தில் மழை அளவு

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை அதிகபட்சமாக பள்ளமோர்குளத்தில் 14 மி.மீட்டர் மழை பெய்தது. மழை விபரம் (மி.மீ.,): வாலிநோக்கம்- 13, ராமநாதபுரம்- 2.10, ராமேஸ்வரம்- 3.20, பரமக்குடி- 9.20, கமுதி- 9.50, பாம்பன்- 8.40, மண்டபம்- 4, தங்கச்சிமடம்- 5.60 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இதில், அதிகபட்சமாக பள்ளமோர்குளத்தில் 14.மி.மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தில் மொத்த மழையளவு 69 மி.மீ. சராசரியாக 4.31 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## மாவட்டத்தில் மழை விவசாய பணி துவக்கம்; பூமியும் குளிர்ந்தது

சிவகங்கை : மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் பரவலாக நல்ல மழை பெய்து வருவதால் பூமி குளிர்ச்சி அடைந்துள்ளது. விவசாய பணிகளும் துரிதமாக நடந்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்துவிட்டதால், கண்மாய்,குளங்கள் உள்ளிட்ட விவசாய பாசன வசதி பெறும் நீர்நிலைகள் அனைத்தும் வறண்டு விட்டன. இதன் காரணமாக, கண்மாய், ஆற்றுப்பாசனம் மூலம் விவசாய பணிகளை செய்து வந்த 1.20 லட்சம் எக்டேர் நில விவசாயிகள் தவித்து வந்தனர். தொடர் மழையின்றி, சிவகங்கை வறட்சி மாவட்டமாக விளங்குகின்றன. இந்நிலையில், வைகை ஆற்றில் தண்ணீர் இன்றியும், காவிரி கூட்டுகுடிநீர் திட்டத்தில் இருந்து வரும் குடிநீரின் அளவும்

குறைந்ததால், வறட்சியின் பிடியில் குடிநீர் கிடைக்காமல்,மாவட்ட மக்கள் தவித்தனர். குறிப்பாக மானாமதுரை வைகை ஆறு கூட்டு குடிநீர் திட்டத்தில் பயன்பெற்ற கிராமத்தினர், குடிநீர் தேவைக்கு வைகையில் தண்ணீர் திறக்க கோரி, கலெக்டரிடம் கோரிக்கை வைத்தனர். இதையடுத்து, குடிநீர் தேவைக்காக வைகையில் தண்ணீர் திறந்து, நேற்று முன்தினம் மூடினர். இதையடுத்து, வைகை ஆறு கூட்டுகுடிநீர் திட்ட ஆழ்துழாய் கிணறுகளில் ஓரளவிற்கு தண்ணீர் கிடைத்து, குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர். நல்ல மழை: கிராம மக்களின் பிற தேவையை பூர்த்தி செய்ய ஏதுவாக கடந்த 2 நாட்களாக மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. குறிப்பாக இரவு நேரங்களில் இடி, மின்னல் இன்றி, நல்ல மழை பெய்து வருகிறது. இதனால், பூமி குளிர்ச்சி அடைந்து குளிர்ந்தது. விவசாய உழவு பணிக்கு ஏற்றவகையில், மழை பெய்ததால், விவசாயிகளும் விவசாய பணிகளை ஆர்வமுடன் துவக்கி வருகின்றனர். மழை விபரம்:

காரைக்குடி-14.2மி.மீ.,

மானாமதுரை-45.

சிவகங்கை-10

திருப்புவனம்-50.4

திருப்புத்தூர்-4

இளையான்குடி-7

தேவகோட்டை - 22.

## <u>மழை குறைவால் சிற்றாறு அணையில் மீண்டும் தண்ணீர் திறப்பு</u>

நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மலையோர பகுதிகளில் சாரல் மழை பெய்து வந்தது. இதனால் சிற்றாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது சாரல் மழை நின்று விட்டதால் விவசாயத்துக்காக சிற்றாறு அணையில் இருந்து மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. 16.10 அடி

தண்ணீர் இருந்த சிற்றாறு அணையில் இரந்து 100 கனசுடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 30.90 அடியாகவும், பெருஞ்சாணி அணை 67.55 அடியாகவும் உள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்


**<u>நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெரியாறு அணைக்கு மீண்டும் நீர்வரத்து</u>**




கூடலூர்: நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் மழை பெய்து வருவதால் முல்லை பெரியாறு அணைக்கு மீண்டும் நீர் வரத் துவங்கி உள்ளது. அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்படுவதால் 133 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை காலை 129.90 அடியாக குறைந்தது. முல்லை பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு மீண்டும் நீர்வரத் துவங்கி உள்ளது. 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம், நேற்று காலை நிலவரப்படி 129.90 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,369 கனஅடி. அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 1,646 கனஅடி. இதில் 1,400 கனஅடி தண்ணீர் பென்ஸ்டாக் பைப் வழியாகவும், 246 கனஅடி தண்ணீர் இரைச்சல் பாலம் வழியாகவும் திறந்து விடப்பட்டுள்ளது. பென்ஸ்டாக்

பைப் வழியாக திறக்கப்பட்டுள்ள 1,400 கன அடி தண்ணீர் மூலம் லோயர்கேம்ப்பில் உள்ள பெரியாறு நீர் மின் உற்பத்தி நிலையத்தில் மூன்று ஜெனரேட்டர் மூலம் 112 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையில் இருந்து கூடுதல் நீர் திறக்கப்படுவதால் 133 அடியாக இருந்த நீர்மட்டம் 129.90 அடியாக குறைந்து விட்டது. அணையின் இருப்பு 4,676 மில்லியன் கனஅடி. 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 40.94 அடியாக குறைந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,573 கனஅடி. அணையிலிருந்து வினாடிக்கு 960 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**ஒகேனக்கல்லில் வெள்ளப்பெருக்கு மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்கிறது**




மேட்டூர்: காவிரி மற்றும் பாலாறு நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு வாரமாக நீர்வரத்து அதிகரித்து வருகிறது. கடந்த 27ம் தேதி காலை விநாடிக்கு 26,456 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று முன்தினம் காலை 34,661 அடியாக அதிகரித்தது. இந்நிலையில், நீர்பிடிப்பு பகுதிகளில் நேற்று மழை குறைந்ததால் நீர்வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 27,870 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 18,600 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இருந்தபோதும் நீர்திறப்பை விட வரத்து அதிகளவில் உள்ளதால், மேட்டூர் அணை நீர் மட்டம் மெல்ல மெல்ல

உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 91.07 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 91.74 அடியாக உயர்ந்தது. நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், ஒகேனக்கல் காவிரியாற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஒகேனக்கல்லில் நேற்று முன்தினம் மாலை விநாடிக்கு 28,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 30,100 கனஅடியாக அதிகரித்தது. நீர்வீழ்ச்சிக்கு செல்லும் நடைபாதையில், சுமார் ஒன்றரை அடி உயரத்திற்கு தண்ணீர் பெருக்கெடுத்துச் செல்கிறது. தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது.

**<u>தேயிலை தூள் விற்பனை அதிகரிப்பு: விலை சரிவு</u>**

குன்னூர், : குன்னூர் ஏல மையத்தில் 80 சதவிகித தேயிலை தூள் விற்பனையானாலும், விலை தொடர்ந்து சரிந்து வருவ தால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 39வது ஏலம் நடந்தது. இதில் 14.38 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. அதில் இலை ரகம் 9.69 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.68 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகரித்ததால் 88 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை சரிந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண ரக வகை கிலோ ஒன்றுக்கு ரூ.43 முதல் ரூ.48 வரையிலும், உயர் வகை ரூ.100 முதல் ரூ.150 வரையிலும், டஸ்ட் ரகத் தில் சாதாரண வகை ரூ.45 முதல் ரூ.55 வரையிலும், உயர் வகை ரூ.120 முதல் ரூ.190 வரையிலும் விலை வழங்கப்பட்டது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு ரூ.202ம், ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.240ம் விலை கிடைத்தது. அடுத்து ஏலம் வருகிற வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது.

இதில் மொத்தம் 15.79 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயா ராக உள்ளது. இந்த வார ஏலத்தில் விற்பனை அளவு உயர்ந்தாலும் தேயிலை தூளின் விலை குறைந்த தால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**துறையூரில் நாளை சின்ன வெங்காயம் மறைமுக ஏலம்**

திருச்சி: திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நாளை காலை 11 மணிக்கு நடக்கிறது. எனவே திருச்சி மாவட்டம் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். மேலும் உற்பத்தி செய்த சின்ன வெங்காயத்துக்கு மறைமுக ஏலத்தில் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால் விவசாயிகள் பங்கேற்று பயனடையலாம். இவ்வாறு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

**நீடாமங்கலத்தில் நிழல்வலைக்குடில் குடைமிளகாய் சாகுபடி பயிற்சிநாளை நடைபெறுகிறது**

நீடாமங்கலம்,: நீடாமங்கலத்தில் நிழல்வலைக்குடில் குடைமிளகாய் சாகுபடி குறித்த பயிற்சி நாளை நடைபெறுகிறது. இது குறித்து நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் பேராசிரியர் முனைவர் .சோழன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் திருவாரூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்ட விவசாயிகள் பயன் பெறும் வகையில் நிழல்வலைக்குடில் குடைமிளகாய் சாகுபடி என்ற தலைப்பில் ஒருநாள் கட்டணமில்லா பயிற்சி நாளை 30ம் தேதி நடைபெற உள்ளது. பயிற்சியில் நிழல்வலைக் குடில் குடைமிளகாய் சாகுபடி தொழில்

நுட்பங்கள் குறித்து செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகளும் ,அரசு சாரா நிறுவன அமைப்புகளும், பண்ணை மகளிர், மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம். பயிற்சி பெற விருப்பம் உள்ளவர்கள் தங்கள் பெயரை நேரிலோ 04367-260666 அல்லது 261444 என்ற தொலைபேசியில் முன்பதிவு செய்து கொள்ளலாம் என சோழன் தெரிவித்துள்ளார்.

**<u>மண்வளம் பெறுக பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் யோசனை</u>**

காரைக்குடி, : மண்வளம் பெருகவும், அதிக மகசூல் பெற சுந்தாள் உர பயிர் சாகுபடி செய்யலாம் என வேளாண்துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது: அதிக மகசூல் பெற வேண்டும் என்றால் இயற்கை உரங்களை மண்ணில் இட வேண்டும். இதில் முக்கிய பங்குவகிப்பது பசுந்தாள் உரங்கள் மற்றும் பசுந்தழை உரங்களாகும். நடப்பு சம்பா சாகுபடிக்கு ஒருசில இடங்களில் பரவலாக ஆழ்குழாய் கிணறுகள் மூலம் நாற்றுகள் விடப்பட்டு 20 முதல் 30 நாள் வயதுடைய பயிர்களாக உள்ளன. நாற்று விடப்பட்ட இடங்களை தவிர்த்து மீதமுள்ள சாகுபடி நிலப்பரப்பில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம். பசுந்தாள் உரத்தில் தக்கை பூண்டு, கொளிஞ்சி, அகத்தி, சீமை அகத்தி, பிள்ளிபயிர் சிறந்தவையாகும். பயிர்வகை இனத்தை சேர்ந்த பசுந்தாள் உர பயிர்கள் காற்றில் உள்ள தழைசந்ததை கிரகித்து 70 சதவீதம் வரை வேர்முடிச்சுகளில் நிலைநிறுத்தி அதில் ஒருபகுதியை மண்ணில் சேர்ப்பதால் நிலம் வளமடைகிறது. மண் அரிப்பை தடுத்து மேல் மண் இழப்பை தடுக்கிறது. மண்ணுக்கு வளம் சேர்ப்பது மட்டுமல்லாமல் பிடிப்பு பயிராகவும், நிழற்பயிராகவும், மூடு பயிராகவும், தீவன பயிராகவும் பயன்படுகிறது. மண்ணின் கரிம பொருட்களை அதிகரிக்க செய்கிறது. பசுந்தாள் எருவானது பயிரின் பேரூட்ட சத்தான தழைசத்து

மண்ணில் இருந்து நீர் மூலம் விரயமாவதை தடுத்து நிறுத்த உதவுகிறது. நுண்ணூட்ட சத்துகளை உறிஞ்சி தன்னுடன் வைத்து கொண்டு பிறகு மண்ணில் உள்ள பயிருக்கு தேவைப்படும் போது எளிதில் கிடைக்க செய்கிறது. எனவே அனைத்து விவசாயிகளும் பசுந்தாள் உர பயிர்களை பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி உழுது மண்வளம் பெருகியுள்ள நிலத்தில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம்.

## அந்தியூர் விற்பனைக் கூடத்தில் ரூ.24.45 லட்சத்துக்கு விளைபொருள் ஏலம்

அந்தியூர்: அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமையன்று விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை நடைபெறும். நேற்று 12 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு வந்து இருந்தன. இதில் ஒரு தேங்காய் ரூ.7.50 முதல் 18.50 ரூபாய் வரை மொத்தம் ரூ.,1.5 லட்சத்துக்கு ஏலம் போனது. 100 மூட்டை தேங்காய் பருப்பு கிலோ ரூ.96.70 முதல் 105.66 வரை ரூ.2.5 லட்சத்துக்குவிற்பனை ஆனது. 20 மூட்டை எள், கிலோ ரூ.88.19 முதல் 109.29 வரை ரூ.1 லட்சத்துக்கும் 20 மூட்டை மக்காச்சோளம் கிலோ ரூ.12.56 முதல் 15.17 வரை ரூ.20 ஆயிரத்திற்க்கும் 1000 மூட்டை பி.டி. காட்டன் ரக பருத்தி கிலோ ரூ.39.00 முதல் 44 வரை மொத்தம் ரூ.18.25 லட்சத்திற்கும் ஏலம் போனது. 100 மூட்டை நிலக்கடலை விற்பனைக்கு வந்திருந்தது. இதில் பச்சை நிலக்கடலை கிலோ ரூ.18.60 முதல் ரூ. 33 வரையிலும், காய்ந்த நிலக்கடலை கிலோ ரூ.33 முதல் 43.12 வரை ரூ.1 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்த விவசாய விளைபொருட்கள் ரூ.24 லட்சத்து 45 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

## வரத்து குறைவால் கரூர் மார்க்கெட்டில் பூக்கள் விலை அதிகரிப்பு

கரூர்: கரூர் பூ மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து குறைவாக இருந்த காரணத்தினால் பெரும்பாலான பூக்கள் விலை சற்று அதிகமாக விற்பனை செய்யப்பட்டது. கரூர் 5 ரோடு செல்லும் சாலையில் பூ

மார்க்கெட் செயல்படுகிறது. சேங்கல், கிருஷ்ணராயபுரம், வேலாயுதம்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்தும், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய மாவட்ட பகுதிகளில் இருந்தும் பூக்கள் அதி களவு கரூர் மார்க்கெட்டுக்கு வருகிறது. இந்நிலையில், போதிய மழையின்மை கார ணமாக இந்த பகுதிகளில் கரூர் பூ மார்க்கெட்டுக்கு மிகவும் குறைந்த அளவில £ன பூக்களே வருகிறது. இத ன்படி, விழாக்கள் அடுத்த சில நாட்களில் வரவுள்ள தால் கரூர் மார்க்கெட்டுக்கு அதிகளவு மக்கள் குவிந்தனர். ஆனாலும், பூக்கள் வரத்து குறைவு காரணமாக அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. அதன்படி, அரளி பூ ஒரு கிலோ ரூ.250க்கும், மல்லிகைப்பூ ரூ.400க்கும், முல்லைப்பூ ரூ.300க்கும், ஜாதிப்பூ ரூ.300க்கும், சம்மங்கி ரூ.200க்கும், கோழிக்கொண்டை ஒரு பூ ரூ.20க்கும், மருவு ரூ.80க்கும் கரூர் பூ மார்க்கெட்டில் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. மேலும், அடுத்தடுத்த நாட்களில் பூ மார்க்கெட்டுக்கு அதிகளவு பூக்கள் வரத்து அதிகரிக்கும் என நினைக்கிறோம் என பூ மார்க்கெட் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**மலைப்பகுதியில் மழை**

ராஜபாளையம், : மேற்கு தொடர்ச்சி மலைபகுதியில் மழை பெய்து வருவ தால் ராஜபாளையத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர் பஞ்சம் தீரும் என பொதுமக்கள் நம்பிக்கையில் உள்ளனர். ராஜபாளையத்தில் ஏற் பட்ட கடுமையான குடிநீர் பஞ்சத்தால் 28 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோ கம் செய்யப்பட்டு வந்தது. இதனை கண்டித்து பொதுமக்கள் கடந்த வாரம் 8 இடங்களில் சாலை மறியல், நகராட்சி அலுவலகம் முற் றுகை உள்ளிட்ட போராட்டங்களை நடத்தியும் எந்த வித பலனும் கிடைக்காமல் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் உள்ள வழுக்குபாறை, மாவரசியம்மன் கோயில் ஆறு, நீராவி ஆறு, முல்லிக்கடவு ஆற்றுபகுதியில் நேற்று முன் தினம் மாலையில் மழை பெய்ய துவங்கியது. இந்த மழை இரவு வரை நீடித்ததால் அய்யனார் கோயில்

ஆற்றில் தண்ணீர் ஓடத் துவங்கியது. ஆற்றில் வரும் தண்ணீர் அனைத்தையும் ராஜபாளை யம் நகருக்கு குடிநீர் வழங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தேக்கத்திற்கும், சுத்திகரிப்பு நிலையத்திற்கும் அனுப்பப்பட்டு வருகிறது. சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நேராக ராஜபாளை யம் நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 3 பெரிய நீர்த்தேக்க தொட்டி க்கு ஏற்றி பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. இதனால் நகர் பகுதியில் குடிநீருக்கு இந்த வாரம் முதல் பஞ்சம் இருக்காது என்று பொதுமக்கள் நம்பிக்கையில் உள்ளனர்.

**வாடும் பயிர்களை பாதுகாக்க வாடகை இல்லா டீசல் இன்ஜின் வேளாண் பொறியியல் துறை நடவடிக்கை**

விருதுநகர், : வறட்சியால் கருகும் பயிர்களை காப்பாற்ற வாடகை இல்லா டீசல் இன்ஜின்களை விவசாயிகளுக்கு வழங்க வேளாண் பொறியியல் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. வறட்சியால் கருகும் நிலையில் உள்ள பயிர்கள், இரண்டு அல்லது மூன்று தண்ணீர் பாய்ச்சினால் விளைச்சல் இருக்கும் என்ற நிலையில் உள்ள பயிர்களை காப்பாற்ற அருகில் உள்ள பண்ணைக்குட்டைகள், கிணறுகள், குளங்கள் ஆகியவற்றிலிருந்து ஆயில் என்ஜின் மூலம் தண்ணீர் இறைத்திட ஆயில் என்ஜின் தெளிப்பு நீர் மற்றும் மழை தூவான் கருவிகள் வேளாண்மை பொறியியல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த கருவிகளை வாடகை இல்லாமல் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாயிகள் தங்களது சொந்த செலவில் ஆயின் என்ஜின் மற்றும் கருவிகளை எடுத்துச் சென்று பயன்படுத்தி பணி முடிந்தவுடன் திரும்பவும் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தில் நல்ல முறையில் ஒப்படைக்க வேண்டும். அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு இவை வழங்கப்படும். விருதுநகர், அருப்புக்கோட்டை, காரியாபட்டி, திருச்சுழி மற்றும் நரிக்குடி வட்ட விவசாயிகள் விருதுநகர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இந்த கருவிகளை

பெற்றுக் கொள்ளலாம். சாத்தூர், வெம்பக்கோட்டை, ராஜபாளையம், திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு பகுதி விவசாயிகள் கிருஷ்ணன் கோவிலில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**குமரியில் நீடிக்கும் சாரல் மழை**

நாகர்கோவில்,: குமரி மாவட்டத்தில் நேற்றும் பல் வேறு இடங்களில் சாரல் மழை பெய்தது. மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்தது. மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை வரை அதிகபட்சமாக சிற்றார்-1ல் 32.8 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை அணை யில் நீர்மட்டம் 30.80 அடி யாக இருந்தது. அணைக்கு 285 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பெருஞ்சாணி நீர்மட்டம் 67.65 அடியாக இருந்தது. அணைக்கு 194 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. பெருஞ்சாணி அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு 160 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. சிற்றார்-1ல் 16.04, சிற்றார்-2ல் 16.14, பொய்கை 5.30, மாம்பழத்துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. மாவட்டத்தில் அதிகபட்சமாக சிற்றார்-1ல் 32.8 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை 21.8, பெருஞ்சாணி 8.6, சிற்றார்-2ல் 23.4, மாம்பழத்துறையாறு 6.4, இரணியல் 5.2, அடையா மடை 5, கோழிப்போர்விளை 6, திருவட்டார் 18, முள்ளங்கினாவிளை 13, புத்தன் அணை 8, பூதப்பாண்டி 5.5, சுருளோடு 1.5, கன்னிமார் 20.7, பாலமோர் 15.3 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது.

**<u>விவசாயிகளுக்கு மானிய விலையில் மா ஒட்டுச்செடி</u>**

விருத்தாசலம்: விருத்தாசலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கம்மாபுரம் வட்டாரத்தில் இந்த ஆண்டு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மா புதிய நடவு செய்ய உள்ள விவசாயிகளுக்கு ஹெக்டர் ஒன்றிக்கு ரூ 7,650 மதிப்பிற்கு 100 மா ஒட்டுச் செடிகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றது. விவசாயிகளுக்காக நீலம், பெங்களூரா, பங்கனப்பள்ளி, அல்போன்சா மற்றும் செந்தூரா மா ஒட்டுச் செடிகள் விருத்தாசலம், நெய்வேலி தோட்டக்கலை பண்ணைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் தக்க ஆவணங்கள்( சிட்டா அடங்கல், புகைப்படம், ரேசன் கார்டு நகல், வங்க கணக்கு புத்தக நகல்) துறை களப்பணியாளர்களையோ, அல்லது தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தையோ தொடர்புகொண்டு முன்பதிவு செய்து பெற்று பயனடையலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**<u>விளை நிலங்களுக்கு பாய்ச்ச டீசல் இன்ஜினை பயன்படுத்தி வாய்க்காலில் தண்ணீர் இறைப்பு</u>**

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் விவசாய பணிகள் நடைபெறுகிறது. இந்த ஆண்டு காலதாமதமாக கீழணை திறக்கப்பட்டது. கீழணை திறப்பதற்கு முன்னர் சில தினங்கள் தொடர்ந்து மழை பெய்ததால் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்தனர். இந்த வயல்களில் நெற்பயிர்கள் முளைத்து நன்றாக உள்ளது. நேரடி நெல் விதைப்பு செய்து ஒரு மாதம் ஆகுவதால் விளை நிலங்களில் தண்ணீர் பாய்ச்சும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் வடக்கு ராஜன் வாய்க்காலில் குறைந்த அளவே தண்ணீர் திறக்கப்படுவதால் பல்வேறு கிராமங்களுக்கு தண்ணீர் செல்ல இயலவில்லை. இதன் காரணமாக பாசன வாய்க்கால்களில் செல்லும்

தண்ணீரை விவசாயிகள் டீசல் இஞ்ஜினை பயன்படுத்தி நீண்ட தூரம் நீர் கடத்தும் குழாய்கள் மூலம் விளை நிலங்களுக்கு தண்ணீரை கொண்டு செல்கின்றனர். கடந்த காலங்களில் குறுவை சாகுபடிக்கு அரசு சார்பில் விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் நீர் கடத்தும் குழாய்கள் வேளாண்மை துறை சார்பில் வழங்கப்பட்டது. இதை பயன்படுத்தி விவசாயிகள் அதிக தூரம் நீரை கடத்தி சென்று பயன்படுத்தி வந்தனர். நீர் கடத்தும் குழாய்கள் 100 மீட்டர் குழாய்க்கு ஒரு நாளைக்கு ரூ.200 வீதம் வாடகை தரப்படுகிறது. ஒவ்வொரு விவசாயியும் சுமார் ஆயிரம் மீட்டர் வரை தினந்தோறும் வாடகைக்கு நீர் கடத்தும் பிளாஸ்டிக் குழாய்களை பயன்படுத்தி வருகின்றனர். ஆகவே சம்பா சாகுபடியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் நீண்ட தூரம் தண்ணீர் கடத்துவதற்கு ஏதுவாக குழாய்களை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

**<u>கோபி அருகே வனப்பகுதியில் தொடர் மழை, குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பியது</u>**

கோபி: கோபி அருகே உள்ள குண்டேரிப்பள்ளம் அணை தொடர் மழை காரணமாக நிரம்பி உபரிநீர் வெளியேறி வருகிறது. ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரங்களில் ஒன்றாக கோபி அருகே உள்ள குண்டேரிப்பள்ளம் அணை விளங்கி வருகிறது. குன்றி மலையடிவாரத்தில் இந்த அணை, குன்றி, விளாங்கோம்பை, கடம்பூர், மல்லியதுர்கம் உள்ளிட்ட மலைப்பகுதிகளில் பெய்யும் மழை நீரை 42 அடி வரை தேக்கி வைத்து பாசனத்திற்கு பயன்படும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. இந்த அணை மூலம் வினோபாநகர், மோதூர், இந்திரா நகர், வாணிப்புத்தூர், கோவிலூர், கொங்கர்பாளையம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 500 ஏக்கர் விளைநிலங்கள் நேரிடையாகவும், 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் விளைநிலங்கள் மறைமுகமாகவும் பாசன வசதி பெறுகின்றன. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக போதிய அளவு மழை இல்லாத

நிலையில் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தே இருந்தது. கடந்த சில நாட்களாக அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்மழை காரணமாக அணைக்கு வரும் தண்ணீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வந்தது. இதனால் அணை நீர்மட்டமும் மளமளவென உயர்ந்து வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் **36** அடியாக இருந்த நிலையில் ஒரே நாள் இரவில் பெய்த மழையினால் அணை அதன் முழு கொள்ளளவான **42** அடியை எட்டியது. வனப்பகுதியில் பெய்த கனமழை காரணமாக அங்குள்ள பத்துக்கும் மேற்பட்ட பள்ளம் மற்றும் காட்டாறுகளின் மூலம் அதிகளவு தண்ணீர் வந்ததால் நேற்று முன்தினம் நள்ளிரவு **12** மணியளவில் அணை நிரம்பி உபரிநீர் வெளியேறத்தொடங்கியது. தொடர்ந்து அணை நிரம்பி வந்ததால் கோபி உதவி செயற்பொறியாளர் ராமசாமி தலைமையிலான பொதுப்பணித்துறை அதிகாரிகள் விடிய விடிய அணை நிலவரத்தை கண்காணித்து வந்தனர். அணையில் கடந்த சில மாதங்களாக ரோகு, கட்லா உள்ளிட்ட பல வகை மீன்கள் வளர்க்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அணையில் இருந்து வெளியேறும் உபரிநீரில் சுமார் ஒரு அடி நீளமுள்ள மீன்கள் ஆயிரக்கணக்கில் வெளியேறியது. அந்த மீன்களை அணையை சுற்றி உள்ள பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் கொசுவலை, துணி போன்றவற்றின் மூலம் பிடித்துச் சென்றனர். அதே போன்று கொங்கர்பாளையம் வனகாப்பாளர் பழனிச்சாமி தலைமையில் வனத்துறையினரும் அணை நீர்மட்டத்தையும், வன விலங்குகள் மற்றும் விளாங்கோம்பை வனபகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களின் நடமாட்டத்தையும் கண்காணித்து வந்தனர். மலைவாழ் மக்களுக்கு உரிய எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டு உள்ளதால் அணையில் இருந்து வெளியேறும் தண்ணீரின் அளவும் அதிகரித்துக்கொண்டே உள்ளது. அதனால் அணையின் வழியோர கிராமங்களான வாணிப்புத்தூர், வினோபாநகர், இந்திராநகர், கொங்கர்பாளையம், மோதூர், விளாங்கோம்பை உள்ளிட்ட பகுதிகளில் வருவாய்த்துறை மூலம் வெள்ள

அபாய எச்சரிக்கையும் தண்டோரா மூலம் போடப்பட்டுள்ளது. இதுகுறித்து இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறும் போது, 'கடந்த 5 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது தான் இந்த அணை நிரம்பி உள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே போதிய தண்ணீர் இல்லாததால் ஒரு போக விவசாயமே கேள்விக்குறியாக இருந்த நிலையில் தற்போது அ¬ ண நிரம்பி உள்ளதால், ஒரு வருடத்திற்கு பாசனத்திற்கு கவலை இல்லை' என்றனர். கடந்த சில ஆண்டுகளாகவே தண்ணீர் மற்றும் உணவுக்காக வந்த யானைகள் கூட்டத்தால் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள விளைபொருட்களை விவசாயிகள் இழந்துள்ளன ர். அதே போன்று குடற்புழு உள்ளிட்ட நோய் கார ணமாக பல யானைகள் உயிரிழந்து உள்ளது. தற்« பாது தொடர் மழை கார ணமாக வனபகுதியில் உள்ள தடுப்பணைகள், குட்டைகள், தண்ணீர் தெ £ட்டிகள் நிரம்பி உள்ளதால் வன விலங்குகள் ஊருக்குள் வருவது தடுக்கப்பட்டுள்ளது என்று வனத்துறையினர் தெரிவித்தனர்.

**<u>விலை கணிசமாக அதிகரிப்பு தேங்காய் உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம்</u>**

கோபி, : கோபி பகுதியில் தேங்காய் விலை கணிசாமாக அதிகரித்ததை தொடர்ந்து தேங்காய் உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கோபி மற்றும் அதைச்சுற்றி உள்ள பகுதிகளில் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற பயிர்களுடன் தேங்காய் உற்பத்தியிலும் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் பொள்ளாச்சிக்கு அடுத்து ஈரோடு மாவட்ட விவசாயிகளே அதிகளவு தேங்காய் உற்பத்தி செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக தேங்காய்க்கு உரிய விலை கிடைக்காத நிலையில் பெரும்பாலான விவசாயிகள் இளநீராகவே விற்பனை செய்து வந்தனர். தேங்காயை விட இளநீருக்கு நல்ல விலை கிடைக்கவே பெரும்பாலான விவசாயிகள் தேங்காய் உற்பத்தியை கைவிட்டுவிட்டு இளநீர் விற்பனைக்கு மாறினர். இதனால் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த ஒரு வருடமாகவே

தேங்காய்க்கும், கொப்பரைக்கும் நல்ல விலை கிடைத்து வருகிறது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ ரூ.40 வரை மட்டுமே விற்பனையான நிலையில் கடந்த ஒரு வருடமாக 100 ரூபாயை தாண்டி விற்பனையாகிறது. அதனால் தற்போது கோபி பகுதி விவசாயிகள் இளநீர் விற்பனையை நிறுத்திவிட்டு மீண்டும் தேங்காய் உற்பத்திக்கு மாறியுள்ளனர். தற்போது, தேங்காய் மட்டை உரிப்பவர்களுக்கும் நல்ல கூலி கிடைத்து வருகிறது. கோபி அருகே உள்ள வெள்ளாங்கோயிலை சேர்ந்த தேங்காய் மட்டை உரிக்கும் தொழிலாளிகள் கூறும் போது, கடந்த 20 ஆண்டுகளாக நாங்கள் 6 பேர் தேங்காய் மட்டை உரிக்கும் தொழில் செய்து வருகிறோம். கடந்த ஆண்டு வரை இளநீராக விற்பனை செய்து வந்த விவசாயிகள் இந்த ஆண்டு தேங்காய் உற்பத்தி செய்கின்றனர். இதனால் சில மாதங்களுக்கு முன் வரை வேலை இல்லாமல் இருந்த எங்களை போன்ற தொழிலாளர்களுக்கு தற்போது மீண்டும் ஓரளவு வேலை கிடைத்துள்ளது. 100 தேங்காய் மட்டை உரிப்பதற்கு ரூ.40 முதல் ரூ.50 வரை கூலியாக வாங்கி வருகிறோம் என்றனர்.

## <u>75 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி பவானிசாகர் அணையில் 10 டிஎம்சி மட்டுமே நீர் இருப்பு</u>

ஈரோடு, : பவானிசாகர் அணையில் 10 டிஎம்சி மட்டுமே நீர்இருப்பு உள்ள நிலையில் நெல் சாகுபடிக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சம் விவசாயிகளிடம் எழுந்துள்ளது. முறை வைத்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது, வடகிழக்கு பருவமழையில் கிடைக்கும் நீரை கொண்டு பாசனகாலத்துக்கு முழுமையாக தண்ணீர் திறக்க முடியும் என பொதுப்பணித்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். ஈரோடு மாவட்ட பாசனத்தின் உயிர்நாடியாக விளங்கி வருவது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கடந்த மாதம் 75 அடியாக இருந்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில்

நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தற்போது தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்குட்பட்ட 24,500 ஏக்கரில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதே போல காலிங்கராயன் பாசன வாய்க்காலில் 15,500 ஏக்கர் பரப்பளவில் 5 ஆயி ரம் ஏக்கரிலும், கீழ்பவானி பாசனத்தின் கீழ் மொத்தமுள்ள 1 லட்சத்து 3500 ஏக்கரில் சுமார் 30 ஆயிரம் ஏக்கரிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதுபோக கசிவுநீர் பாசனத்தில் மொத்தமுள்ள 30 ஆயிரம் ஏக்கரில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி என மாவட்டம் முழுவதும் சுமார் 75 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசன பகுதியில் மட்டும் முறை வைத்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் மற்ற பகுதிகளுக்கு தொடர்ந்து நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அணையில் 10.7 டிஎம்சி., மட்டுமே நீர் இருப்பு உள்ள நிலையில் இதைக் கொண்டு இதர பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியுமா என்ற கவலை விவசாயிகளிடம் எழுந்துள்ளது. தற்போது பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மற்றும் வடகேரளாவில் பெய்து வரும் மழையால் நீர்வரத்து அதிகரித்திருப்பது விவசாயிகளிடம் சற்றே நம்பிக்கையை ஏற்படு த்தியுள்ளது. எனவே அக்டோபரில் இருந்து துவங்க உள்ள வடகிழக்கு பருவ மழை சீசனில் பெய் யும் மழையை கொண்டும், முறைநீர் பாசனத்தை அமல்படுத்தியும் பாசன காலம் முழுமைக்கும் தண்ணீர் விநியோகம் செய்ய முடியும் என பொதுப்பணித்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து பொதுப்பணித்துறையினர் கூறியதாவது: தற்போது பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 69.53 அடியாக உள்ளது. 10.75 டிஎம்சி., நீர்இருப்பு உள்ளது. அணைக்கு 3825 கனஅடி நீர்வரத்து உள்ள நிலையில் அணையில் இருந்து தற்போது ஆற்றின் வழியே பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. கீழ்பவானி

பாசனத்துக்கு மட்டும் 2300 கனஅடி வீதம் கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால் ஆற்றின் வழியே தண்ணீர் நிறுத்தி விட்டோம். அதேசமயம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதியில் தற்போது முறைநீர் பாச னத்தை அமல்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த மாதம் முதல் கீழ்பவானி வாய் க்கால் பகுதியிலும் முறைநீர் பாசனம் அமல்படுத்தப்படும். தற்போது நீர்பிடிப்பு பகுதியிலும் தொ டர்ந்து மழை பெய்து வருவதால் அணைக்கு ஓரளவு நீர்வரத்தும் உள்ளது. அடுத்ததாக வடகிழக்கு பருவமழை சீசன் துவங்குவதால் ஓரளவு அணைக்கு நீர்வரத்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தற்போதுள்ள நீர்இருப்பையும், வரும் நீர்வரத்தையும் கொண்டு தடையின்றி பாசனத்துக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் தற்போது சாகுபடி செய்துள்ள நெற்பயிருக்கு கட்டாயம் நீர்விநியோகம் செய்ய முடியும் என்று நம்புகிறோம். இவ்வாறு பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

**சரபோஜிராஜபுரத்தில் விவசாயிகளுக்கு கவாத்து பயிற்சி**

பாபநாசம்: சரபோஜிராஜபுரத்தில் விவசாயிகளுக்கு கவாத்து பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக் கலைத் துறை ஆகியவை இணைந்து பாபநாசம் அருகே சரபோஜிராஜபுரத்தில் மத்திய அரசின் வேளாண்மை விரிவாக்க துணை இயக்கம் அட்மா திட்டத்தின் கீழ் சண்முகம் என்பரவது தோட்டத்தில் மாமரங்களை கவாத்து செய்தும், பின்னர் மாமரங்களை தாக்கும் நோய், பூச்சிகளை கண்டறிந்து அவைகளை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி சுற்று வட்டார விவசாயிகளுக்கு விளக்கி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.இதில் தோட்டக் கலை உதவி இயக்குநர் சுரேஷ்குமார், அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜெயபிரபா, உதவி வட்டார தொழில் நுட்ப மேலாளர் தனசேகரன், தோட்டக் கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் மணி வண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் 25க்கும் மேற்பட்ட

விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

**<u>வாழையை தாக்கும் நோயை கட்டுப்படுத்த வழிமுறை</u>**

பாபநாசம்: வாழையை தாக்கும் நோயை கட்டுப்படுத்த என்ன வழிமுறைகள் குறித்து அதிகாரி விளக்கம் அளித்தார். தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக் கலைத்துறை ஆகியவை இணைந்து பாபநாசம் அருகே ஈச்சங்குடியில் மத்திய அரசின் வேளாண்மை விரிவாக்க துணை இயக்கம் அட்மா திட்டத்தின் கீழ் வாழைக் கன்றுகளை தெரிவுச் செய்து வயலில் நடுவதற்கு நேர்த்தி செய்வது குறித்தும், வாழைப் பயிரை தாக்கும் நோய் மற்றும் பூச்சிகளை கட்டுப் படுத்தும் முறைகள் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. தோட்டக் கலை உதவி இயக்குனர் சுரேஷ்குமார், வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜெயபிரபா, உதவி வேளாண்மை அலுவலர் தோட்டக்கலைத்துறை மணிவண்ணன், ஊராட்சி துணைத் தலைவர் மாரிமுத்து உள்பட 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>பரவலாக கொட்டியது மழை ராமநாதபுரத்தில் 53.2 மி.மீ. பதிவு</u>**

ராமநாதபுரம், :ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று காலை வரை பர வலாக மழை கொட்டியது. அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 53.2 மி.மீ மழை பதிவானது. வானம் பார்த்த பூமி யான ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்தது. இதனால் கண்மா ய்கள், ஊரணிகள் வறண் டன. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. விவசாய கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி, திருவாடனை, தேவிபட்டினம், திருப்பாலைக்குடி, உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில், இந்த ஆண்டு பருவமழை பெய்யும் என எதிர்பார்த்து விவசாயிகள் கோடை உழவை தொடங்கினர். இருந்தும்

பருவமழை பெய்யாததால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்து வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. நேற்று காலைவரை மழை நீடித்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வறட்சியை தாங்கி வளரும் குதிரைவாலி, கேழ்வரகு உள்ளிட்ட சிறுதானியங்களை சாகுபடி செய்வதற்கான ஆயத்த பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். நயினார்கோயில் ஒன்றியம் பாண்டியூர், அக்கிரமேசி உள்ளிட்ட பகுதிகளில் சிறுதானியம் சாகுபடி செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். ராமநாதபுரம் நகரில் நேற்று பெய்த மழையில் வசந்தநகர், வெளிப்பட்டினம், ஓம்சக்திநகர், நாகநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்கியது. ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் மழைநீர் குளம்போல் தேங்கியது. நோயாளிகள் சிரமத்திற்கு ஆளாகினர். நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் பெய்த மழையளவு (மி.மீ.) வருமாறு:

ராமநாதபுரம் 53.2, பரமக்குடி 14, முதுகுளத்தூர் 35, கமுதி 41.5, வாலிநோக்கம் 44.2, கடலாடி 19.3, திருவாடனை 51.2, தொண்டி 9.2, வட்டானம் 45, தீர்த்தாண்டதானம் 24, ஆர்.எஸ்.மங்களம் 9, பாம்பன் 28.6. தங்கச்சிமடம் 49.2, ராமேஸ்வரம் 12.2, மண்டபம் 33.5, பள்ளமோர்குளம் 16, சராசரி மழையளவு 30 மி.மீ என்ற அளவில் பதிவானது.

**<u>தேனீ வளர்ப்புக்கு விண்ணப்பிக்கலாம்</u>**

புதுச்சேரி: புதுச் சேரி வேளாண்துறை கூடுதல் வேளாண் இயக்குனர்(தோட்டக்கலை) வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: புதுச்சேரி அரசு வேளாண்துறையில் உள்ள கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம் மூலம் தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் 2014,15ம் ஆண்டு தேனீ வளர்ப்புக்கான மானியம் பெறுவதற்கு விண்ணப்பங்கள் விருப்பம் உள்ள விவசாயிகளிடமிருந்து

வரவேற்கப்படுகிறது. இந்த விண்ணப்பங்கள் புதுவை தாவரவியல் பூங்காவில் உள்ள கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகத்தில் உள்ள காய்கறி பிரிவில் பெற்று பூர்த்தி செய்து அக்டோபர் 17ம் தேதிக்குள் சமர்ப்பித்து தேனீ வளர்ப்பதற்கான ஆணையை பெற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. கடைசி தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கர்நாடகாவில் இருந்து தஞ்சைக்கு 1,950 டன் யூரியா உரம் தஞ்சை வந்தது மேலும் 13 ஆயிரம் டன் உரம் கொண்டுவர ஏற்பாடு**



கர்நாடகாவில் இருந்து தஞ்சைக்கு 1,950 டன் இப்கோ யூரியா உரம் நேற்று தஞ்சை வந்தது. மேலும் நவம்பர் மாதத்திற்குள் 13 ஆயிரம் டன் உரம் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

<u>யூரியா உரம்</u>

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் பகுதிகளில் சம்பா, தாளடி சாகுபடி பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு தேவையான உரங்களும்

இருப்பு வைக்கப்பட்டு வேளாண் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் கடைகளில் வினியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கர்நாடக மாநிலம் மங்களூர் துறைமுகத்தில் இருந்து 31 சரக்குரெயில் பெட்டிகளில் 1,950 டன் உரம் தஞ்சை வந்தது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இந்த உரம் தஞ்சைக்கு கொண்டுவரப்பட்டது. தஞ்சையில் இருந்து லாரிகள் மூலம் ஏற்றப்பட்டு தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

மேலும் 13 ஆயிரம் டன்

இது குறித்து இப்கோ யூரியா உர நிறுவன திருச்சி மண்டல மேலாளர் சுப்பிரமணியன் கூறியதாவது:–

காவிரி டெல்டா மாவட்டங்களில் யூரியா உரம் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில் இந்த உரம் வரவழைக்கப்பட்டு உள்ளது. இனி யூரியா உரம் தட்டுப்பாடு இருக்காது. இந்த உரங்கள் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள 190 வேளாண் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஏற்கவே 8 ஆயிரம் டன் காம்ப்ளக்ஸ் போன்ற அடி உரம் வரவழைக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு உள்ளது. இன்னும் 10 ஆயிரம் டன் யூரியா, 3 ஆயிரம் டன் கம்ப்ளக்ஸ், டி.ஏ.பி போன்ற அடிஉரம் நவம்பர் 15–ந்தேதிக்குள் வரவழைக்கப்படுகிறது. இது தவிர நீரில் கரைத்து இலைவழியாக தெளிக்கும் உரமும் 20 டன் வரவழைக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**தேனி மாவட்டத்தில் மழை: கொட்டக்குடி, வராகநதி ஆறுகளில் நீர்வரத்து**



தேனி மாவட்டத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக கொட்டக்குடி, வராகநதி ஆறுகளில் நீர் வரத்து ஏற்பட்டு உள்ளது. கொட்டக்குடி ஆறு தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பரவலாக பல்வேறு இடங்களில் மழை பெய்தது. தேனி, போடி பகுதி களில் கடந்த 2 நாட்களாக இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. கொட்டக் குடி பகுதிகளில் பெய்த மழை யின் காரணமாக கொட்டக் குடி ஆற்றில் நீர் வரத்து ஏற்பட்டு உள்ளது. இதனால் ஆற்றில் பல மாதங்களுக்கு பிறகு நீர்வரத்து ஏற்பட்டது. தேனியில் உள்ள கொட்டக் குடி ஆற்றின் தடுப்பணையை தாண்டி தண்ணீர் பெருக் கெடுத்து ஓடியது. இந்த தண்ணீர் முல்லைப்பெரியாற்றில் கலந்தது. நீண்ட நாட் களுக்கு பிறகு தேனியில் கொட் டக்குடி ஆற்றில் நீர் வரத்து ஏற்பட்டதால் பொது மக்கள் கொட்டக்குடி பாலத்தில் நின்று வேடிக்கை பார்த்தனர். வராகநதி

பெரியகுளம் மற்றும் கல்லாற்று பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்தது. இந்த மழையால் பெரியகுளம் நகரின் மையப் பகுதியில் ஓடும் வராகநதி ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டது. பல மாதங்களாக வராகநதியில் கழிவுநீர் தேங்கி நின்றும், குப்பைகள் குவிந்து கிடந்தும் துர்நாற்றம் வீசி வந்தது. இந்த மழையால் கழிவுநீர், குப்பைகள் அடித்துச் செல்லப் பட்டது. இதனால் துர்நாற்றத் தில் மக்கள் விடுதலை பெற்றுள்ளனர். மேலும் இந்த மழை நீடித்தால் ஆறுகளை நம்பி உள்ள நேரடி மற்றும் மறைமுக பாசன நிலங்களில் உணவுப் பொருட்கள் உற்பத்தி பெருகும். எனவே இந்த மழை நீடிக்குமா? என்று விவசாயி கள் எதிர்பார்க்கின்றனர்.